செ.வெ.எண்: 878/2016 நாள்: 16.12.2016

# பத்திரிகை செய்தி வெளியீடு

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2016-2017-ஆம் ஆண்டில் படித்த வேலை இல்லாத இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்று தரும் பொருட்டு மாபெரும் வேலைவாய்ப்பு முகாம் **21.12.2016 அன்று ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரி, நாகர்கோவிலில் வைத்து காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை** நடைபெறவுள்ளது. இம்முகாமில் உள்ளூர் மற்றும் சென்னை, திருவனந்தபுரம், பெங்களூரு போன்ற பெருநகரங்களிலிருந்து பன்னாட்டு நிறுவனங்கள் உட்பட பல்வேறு நிறுவனங்கள் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க உள்ளனர்.

இவ்வேலைவாய்ப்பு முகாமில் தகுதியுள்ள மற்றும் விருப்பமுள்ள **அகஸ்தீஸ்வரம் மற்றும் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நாகர்கோவில் நகராட்சி பகுதிகளை சார்ந்த** 8-ஆம் வகுப்பு முதல் தொழிற்பயிற்சி(ITI), பட்டப்படிப்பு, டிப்ளமோ இன் பார்மஸி, நர்சிங், அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை (கலை அறிவியல் மற்றும் பொறியியல்) வரை படித்த 40 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளிகள் ஆண்/பெண் இருபாலரும் தங்களது கல்விசான்றிதழ், சாதிசான்றிதழ், மாற்றுத் திறனாளிகள் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, இதர தகுதிசான்று (அசல் மற்றும் நகல்) மற்றும் புகைப்படங்களுடன் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

__அலுவலக முகவரி:__
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்,
மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவல வளாகம்,
நாகர்கோவில். கன்னியாகுமரி மாவட்டம்

தொடர்புக்கு: 04652–279411

மாவட்ட ஆட்சித் தலைவர்,
கன்னியாகுமரி மாவட்டம்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலம், கன்னியாகுமரி மாவட்டம்.